

# சுதந்திரத்திருநாள் பொன்விழா நிறைவு

15–8–1998 அன்று

சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில்

தேசியக்கொடியை ஏற்றிவைத்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

ஆற்றிய உரை :



*15–8–1998 அன்று*

*சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில்*

*தேசியக்கொடியை ஏற்றிவைத்து*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

*ஆற்றிய உரை :*

# 51-வது சுதந்திரத் திருநாள்

இந்தியச் சுதந்திரத்திற்கு இன்று ஐம்பது ஆண்டு நிறைவு பெறுகிறது.

இந்த வீர செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர் - விழிகளை இழந்தோர் - உயிரினைத் துறந்தோர் - உடைமைகளைப் பறிகொடுத்தோர் - செக்கிழுத்தோர் - கஞ்சிக் கலயம் ஏந்தியோர் - கல்லறையாக மாறியோர் - துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் - தூக்குக் கயிறை முத்தமிட்டோர் அனைவரது காலடிகளிலும், அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகிறோம்!

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திர நாளைப் பற்றியும் இதனை இன்ப நாளாகக் கொண்டாட வேண்டுமென்பது பற்றியும் 1947 ஆகஸ்டு 10ஆம் நாள் அறிஞர் அண்ணா அவர்கள் “திராவிட நாடு “இதழில் பின்வருமாறு எழுதினார்.

அது, இது:-

அன்னிய ஆட்சி ஒழிந்து, புதிய சுதந்திர ஆட்சி உதயமாகும் இதே நாள், அன்னிய ஆட்சியின் விளைவுகளாக இருந்து வரும் தொல்லைகளையும், அல்லல்களையும், நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி, கேட்கும் உரிமையும்,

பலமும், வசதியும், மக்களுக்குத் தானாகவே பிறக்கிறது.

அன்னிய ஆட்சியுடன் போரிட்டு விடுதலை பெறுவதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளப்படுவதால் வேறு பல, முக்கியமான, சமூக, பொருளாதார, அறிவுத் துறைகளிலே, மக்களுக்கு ஏற்ற காரியங்களைச் செய்வதற்கு, நேரமில்லை, நினைப்பில்லை, வசதியில்லை, வழியில்லை என்று கூறி, பிரச்சினைகளுக்கெல்லாம், வாய்தா போட்டு வந்த காலம் ஆகஸ்டு 15ஆம் தேதியோடு முடிவடைகிறது. அன்று முதல், இங்கு மக்களின் நலன், நாட்டு பாதுகாப்பு

ஆகியவைகட்கு பொறுப்பு, இங்குள்ளவர்களிடம் வந்து சேருகிறது.

நாம், அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாதென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்திலேயே, சென்னையில், நடைபெற்ற, மாகாண ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில், பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறதாலேயே, சுதந்திரத்துக்கு விரோதிகள் அல்ல – அன்னிய ஆட்சியை விரும்புவர்கள் அல்ல, என்பதை

ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசி இருக்கிறோம்.

நாட்டு மக்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையுமாகிய, சுதந்திரத்திற்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின்படி நடந்து அதனால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை, சிறைவாசத்தை, தீவாந்திர சிட்சையை, தூக்குமேடையைக் கூட மனமுவந்து ஏற்றுக் கொண்ட தியாகிகளுக்கு, வீரத்தை, தியாகத்தை, கொண்ட கொள்கைக்காக கஷ்ட நஷ்டம் ஏற்க வேண்டும் என்ற கோட்பாட்டை,

மதிக்கும் நாம், வீர வணக்கம் செலுத்த வேண்டும்.

சுதந்திர போராட்டம் என்ற உடனே, சூதுமதியினரான சிலர் அந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சுயநல வேட்டையாடியதும், முரண்பட்ட கொள்கைகள், திடீர் மாறுதல்கள், பண மூட்டைகள், சுரண்டுபவர், ஆகியோர் மட்டுமே தான் நமது கண்களுக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை. நாட்டு விடுதலைக்காக, சிறையிலே வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்ப சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன்,

தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை, ஆகிய வீரத் தியாகிகள் தோன்றுவர் - தோன்றுவதால் - அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டுவதே முறை. ஆகஸ்டு 15ந் தேதி அப்படிப்பட்ட எண்ணற்ற வீரர்களின், கனவுகள், நனவான நாள்”

என்று அறிஞர் அண்ணா 50 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதை இந்தப் பொன்விழா ஆண்டு நிறைவு நாளிலும் நினைவிற் கொண்டு நமது நீண்ட நெடிய பயணத்தைத் தொடர வேண்டியர்களாக இருக்கிறோம்.

பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் - நெல் மணிகள் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும் - நேரம் பார்த்து நீர் பாய்ச்சுவதற்கும் - நோய் நொடிகள், பூச்சிப் புழுக்கள் அணுகாமல் விரட்டுவதற்கும் - இந்த ஐம்பது ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம்.

1972 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டபோதும் - 1997 ஆம் ஆண்டு தொடங்கி சுதந்திரப் பொன்விழா கடந்த ஓராண்டாகக் கொண்டாடப்பட்டு வரும் வேளையிலும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து தொண்டாற்றும் பெரும் பேற்றை

எனக்கு வழங்கியுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

நம் நாடு சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள வேளையில் - நாம் அடைந்த வளர்ச்சிகளை தேசிய அளவில் கணக்குப் பார்த்தோமேயானால் - உலக அரங்கில் நமது நாடு குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது என்பது விளங்கும். இடையிடையே அரசியல் சூறாவளிகள் சுழன்றடித்த போதிலும், அணையாமல் அகல்விளக்காய்ச் சுடர்பரப்பி - உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனும் பெருமையை நிலைநாட்டியுள்ளது. பல

மொழிகள், பல மதங்கள், பல்வேறு பழக்க வழக்கங்கள் உள்ள நாடு நம் இந்திய நாடு என்ற போதும், உரிமைக்குக் குரல் கொடுத்தும் உறவுக்குக் கைகொடுத்தும் வாழும் ஒப்பிலாச் சமுதாயமாக உலகத்திற்கொரு பெருமையாக இந்திய சமுதாயம் படிப்படியாக முன்னேறி முத்திரை பதித்து வருகிறது.

தொழில் வளர்ச்சி பெருகி தொலைதூர நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதிகள் மிகுந்து வருகின்றன.

கணிப்பொறித் தொழில் நுட்பத்தில் இந்திய இளைஞர்கள் உலகம் முழுதும் பரவி புகழ் படைத்து வருகின்றனர்.

தமிழக அரசைப் பொறுத்தவரை, இந்திய சுதந்திரத்திற்காகத் தமது இன்னுயிரீந்த வீரர்களையும், எடுத்தியம்பவொண்ணா இன்னல்களுக்கு இலக்காகிய தீரர்களையும் போற்றிப் பாராட்டிப் பொருந்திய முறையில் புரந்து வருகிறது!

1966 ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1967 பிப்ரவரியில் கழக அரசு அமைவதற்கு முன்வரை தமிழகத்தில் 5 தியாகிகளுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது. கழக அரசு சுதந்திரப் போராட்ட

தியாகிகளுக்குத் தாராளமாக ஓய்வூதியம் வழங்கிப் பாராட்டியதன் விளைவாக - 1976 ஆம் ஆண்டு ஜனவரி 31 அளவில் 8172 சுதந்திரப் போராட்ட தியாகிகள் ஓய்வூதியம் பெற்று மகிழ்ந்தனர்.

அவர்களில் மறைந்தவர்கள் போக இன்றும் வாழ்பவர்கள் 5068 பேர் தியாகிகளுக்கான ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

அதேபோல, மறைந்த விடுதலைப் போராட்ட தியாகிகளின் வாரிசுகள் 1892 பேர் மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

தியாகிகள் மறைவெய்தும்போது ஈமச்சடங்குகளுக்கு 1000 ரூபாய் நிதியுதவி வழங்கிடவும்,

மரணமடையும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அலுவலர் நேரில் சென்று அரசின் சார்பில் மரியாதை செலுத்தவும் ஆணைகளிட்டோம்.

தியாகிகளின் விதவைகள், அவர்களின் சட்டபூர்வமான வாரிசுகளுக்கு இலவசப் பேருந்து சலுகை, இலவச மருத்துவ உதவிகள் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிறையிலிழுத்த செக்கினைத் தேடிக் கண்டுபிடித்து - 1972 ஆம் ஆண்டில் சென்னையில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தோம்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் புதிய கோட்டையை நினைவுச் சின்னமாய் உருவாக்கி அவரது வாரிசுகள் 204 பேருக்கு இலவச வீடுகள் கட்டித் தந்தோம். கட்டபொம்மனின் படைத்தளபதியாய் விளங்கிய வீரன் சுந்தரலிங்கம் பெயரில் புதிய நகரை உருவாக்கி அங்கு அவரது வாரிசுகள் 200

பேருக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வீடமைத்துக் கொடுத்தோம்.

ஆப்பிரிக்க நாட்டில் அண்ணல் காந்தியடிகளுடன் இணைந்து – காந்தியடிகள் போற்றிப் பாராட்டும் வகையில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த வள்ளியம்மை பிறந்த தில்லையாடியில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்தோம்.

மூதறிஞர் இராஜாஜியும், பெருந்தலைவர் காமராஜரும் மறைந்த பொழுது, சென்னையில் அப்பெருமக்களுக்கு – அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபத்தின் இரு மருங்கிலும் அழகிய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தினோம்.

எட்டையபுரத்தில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக்கியதுடன் - திருவல்லிக் கேணியில் பாரதி வாழ்ந்த இல்லத்தினை கடந்த ஆண்டு புதுப்பித்துள்ளோம்.

நாமக்கல் கவிஞர் மாளிகை என தலைமைச் செயலக கோட்டைக்குள் பத்துமாடிக் கட்டடம் ஒன்றை எழுப்பியுள்ளோம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.க்கு தூத்துக்குடியிலும், சென்னையிலும் சிலை வைத்துச் சிறப்பித்தோம்.

மதுரையில் பசும்பொன் தேவருக்குச் சிலை வைத்ததுடன்,

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மருதுபாண்டியருக்கு நினைவகம் அமைத்தோம்.

இந்தப் பொன்விழா ஆண்டில் -

திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை சென்ற, "உப்புச் சத்தியாகிரக" போராட்டத்தை நினைவு கூரும் வகையில் யாத்திரை ஒன்றை 8.8.97 அன்று திருச்சியில் நான் தொடங்கி வைத்தேன்.

டெல்லியில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழா பேரணியில் பங்குபெறச் சென்ற 50 தியாகிகளுக்கு சென்னை இராஜாஜி மண்டபத்தில் வழியனுப்பு விழா நடத்தப்பட்டு, அந்த

தியாகிகள் ஒவ்வொருவருக்கும் அரசின் சார்பில் கதராடையைப் போர்த்தி, பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெற்கட்டும்செவல் எனும் ஊரில் பூலித்தேவன் மாளிகை 50 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

தியாகச் செம்மல் கக்கன் அவர்களுக்கு 31.8.97 அன்று மதுரையில் சிலை வைத்ததுடன்,

வீரத்தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த திருமங்கலம் வீட்டினை, அவர் நினைவைப் போற்றும் வகையில் 60 இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம், நூல்

நிலையம் ஆகியவைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் பொன் விழாவையொட்டி சென்னையில் தியாகிகள் மணி மண்டபம் ஒன்றை அமைத்திட முடிவு செய்து அதன் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவின் நினைவாக, போர்நினைவுச் சின்னம் அருகில் பொன்விழா நினைவுச் சின்னம் அமைத்தோம்.

பொதுவுடைமை வீரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் நினைவுச் சின்னம் உருவாக்கினோம்.

நேதாஜி நூற்றாண்டை ஒட்டி சென்னையில் எழுச்சியூட்டும் நேதாஜியின் முழுஉருவச் சிலையமைத்தோம். இவை மட்டுமல்ல!

வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்து தமிழ்நாட்டில் வேலூரில் 1806ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சிப்பாய் கலகத்தின்போது உயிர்நீத்தோர் தியாகத்தைப் போற்றிட வேலூரில் நினைவுத்தூண் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

எழும்பூரில் ருக்மணி லட்சுமிபதிக்குச் சிலை திறந்து - அவர் வாழ்ந்த மார்ஷல் சாலைக்கு அவர் பெயரிட்டோம்.

ருக்மணி லட்சுமிபதிக்கும் - சர்தார் வேதரத்தினம் பிள்ளைக்கும் அஞ்சல் தலை வெளியிடச் செய்தோம்!

முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவச்சலம் அவர்களுக்கு நினைவகம் அமைத்தோம். முன்னாள் முதல்வர் பி.எஸ். குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழாவை இராஜபாளையத்தில் கொண்டாடி, சென்னையில் அவர் வாழ்ந்த கிரீன்வேஸ் சாலைக்கு அவர் பெயர் சூட்டினோம்.

1995ஆம் ஆண்டிலேயே கொண்டாடி இருக்கவேண்டிய முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆகஸ்டு 25 அன்று சென்னையில் சிறப்பாக கொண்டாட இருக்கிறோம்.

தமிழகம் முழுவதிலும் சாதி சமய பிணக்குகள் நீங்கி தமிழ் மக்கள் ஒன்று பட்டு வாழ்வதற்கு வழி வகுக்கக்கூடிய வகையில் பல்வேறு சாதிசமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் கூடி வாழும் சமத்துவப்புரக் குடியிருப்புகள் மாவட்டந்தோறும் அனைத்து

அடிப்படை வசதிகளுடனும் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு,

முதல் சமத்துவபுரக் குடியிருப்பு வரும் 17.8.1998 அன்று மதுரைக்கு அருகில் திறந்து வைக்கப்பட உள்ளது என்பதனையும் இவ்வேளையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி நினைவுச் சின்னங்களும், சிலைகளும் எடுப்பித்து தியாகிகளைப் போற்றி வருவதுடன் தம்முடைய படைப்பாற்றல்கள் மூலம் சுதந்திர உணர்வுகளை வளர்த்த பல்வேறு அறிஞர் பெருமக்களின் நூல்களை அரசுடைமை

ஆக்கியும் அப்பெரு மக்களுக்கு சிறப்புகள் செய்யப்படுகின்றன.

தமிழ்த் தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கல்கி ஆகியோர் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 20 லட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதலை உணர்வூட்டி, நூல்கள் எழுதிய மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப.ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், கவி. கா.மு.ஷெரிப், வ.வே.சு. அய்யர், பரலி

சு.நெல்லையப்பர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.டி.எஸ். யோகி, ஆகிய 11 அறிஞர் பெருமக்களின் நூல்களை அரசுடைமை ஆக்கி குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்ச ரூபாய் வீதம் மொத்தம் 55 லட்ச ரூபாய் பரிவுத் தொகையாக இன்று இந்தக் கொடி நிழலில் வழங்கப்படுகிறது.

தியாகிகளைப் பாராட்டுவது மட்டுமல்லாமல் - இந்தத் தியாக தீபங்களால் நாடு எய்திய சுதந்திரத்தின் பயன்களை - நாட்டு மக்கள் அனைவரும் - குறிப்பாக நலிந்த பிரிவு மக்கள் அனைவரும் நுகரும் வகையில், எண்ணற்ற பல திட்டங்களை

வகுத்துச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு.

மாநில அளவில் மட்டுமின்றி தேசிய அளவிலும் எல்லா மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படுவதற்கு இந்த அரசு முயற்சிகள் எடுத்து முனைந்து பாடுபடுவதுடன் அண்டை மாநிலங்களுடன் உறவை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் அடையாளம் தான் ஆந்திர மாநிலத்திலிருந்து கிருஷ்ணா தண்ணீர் தமிழகத் தலைநகராம் சென்னைக்கு வருவதாகும். அதேபோல 30 ஆண்டுகால சிக்கலுக்கு முடிவுகட்டி - ஏழாண்டு காலமாக

மறுக்கப்பட்டு வந்த காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை நிறைவேற்று - வதற்காக ஒரு உடன்பாட்டை இந்தியப் பிரதமர் முன்னிலையில் கர்நாடகம், தமிழகம், கேரளம், புதுவை ஆகிய நான்கு மாநில முதல்வர்களும் உருவாக்கியதாகும்.

அத்துடன் முல்லைப் பெரியார் அணைப் பிரச்சினைக்கும் தமிழக அரசும் கேரள மாநில அரசும் கூடிப் பேசி எடுத்துள்ள தொடக்க முயற்சியும் மகிழத் தக்க ஒன்றாக விளங்குகிறது.

எனவே, இந்தச் சுதந்திர நாளில் இந்தியத் திருநாட்டில் பல்வேறு இனம், மொழி மக்களிடையே வேற்றுமையில்

ஒற்றுமை கண்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோருக்கும் - போரிட்டோருக்கும் மாத்திரமல்ல - இந்தச் சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க வேண்டிய ஏழை எளிய சாதாரண சாமான்ய மக்களுக்கும் நாம் கடமைப்பட்டவர்கள் என்ற சூளுரையை மேற்கொள்வோம்.

வெளியீடு :- இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்புத்துறை